# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 262/மா/2023**
**நாள் : 03.10.2023**

திரு. S. மணிவாசகம்,
சென்னை – 600 020. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையார், இந்திரா நகர், 16வது குறுக்குத் தெரு, எண்.2/5A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. மணிவாசகம் என்பவரின் 11.8.2023 நாளிட்ட மனு 14.8.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 262/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையார், இந்திரா நகர், 16வது குறுக்குத் தெரு, எண்.2/5A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. மணிவாசகம் என்பவர் தனது முறையீட்டு மனுவில்,

"I own two Tamil Nadu slum clearance tenements bearing Flat Nos.2/5 (Lower Floor) & 2/8 (Upper Floor) situated at 16th Cross Street, Indira Nagar, Adyar, out of which I have sold the Upper Floor tenement No.2/8 to Sasikumar and Saranya in the year of 2018 and I have also rented out the lower floor No.2/5 to Siva. While these being so, the said Sasikumar, who purchased the said property from me, have illegally constructed the three-storied building in violation of the norms without obtaining any approval. Moreover, the said Sasikumar is drawing corporation metro water illegally from the common line to extract more water, which leads to other residents in the tail end area of a locality alert them when water supply decreases in pressure to their houses due to illegal tapping in houses before them. The water line which is connected to a hand pump of a house is intercepted. A separate hose or pipe is connected to draw extra water. In this regard, I have preferred complaint to Corporation Adyar, Zone-13 several times but, no action was taken. The funny part about this is that the Corporation Zone-13 was not even assessed and collected tax

for the said unauthorized building since the said Sasikumar belongs to ruling Political Party, he hand in glove with officials of Greater Chennai Corporation and local Party members and thereby violating the rules and regulations.

The said Slum Clearance Board flats are almost 53 years old but the said Sasikumar has built it on top of the old flat (Existing building) without following the basic building norms and therefore my lower floor is dilapidated and in danger of collapsing anytime and it may leads to life risk. With regards to this issue, I have preferred a complaint to the Commissioner, Greater Chennai Corporation on 11.03.2023 but till date no tangible action has been taken.

Under these circumstances, I humbly pray this Hon'ble Board/Authority to direct the respondents to inspect the said unauthorized/illegal construction building and take appropriate legal action.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு, 12.9.2023 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 13, மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 20.09.2023 நாளிட்ட அறிக்கையில்:**

முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து தெரிவிப்பது யாதெனில் மனுதாரர் குறிப்பிடும் மனைபிரிவுடன் கூடிய கீழ்தளம் மற்றும் மேல்தளம் குடியிருப்பு மனைகள் சுமார் 40 வருடங்களுக்கு முன் இரு பயனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நிபந்தனைகளுடன் விற்பனை செய்துள்ளனர். எனவே, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், இந்திராநகர் பகுதியில் குடியிருப்பு மனைப்பிரிவுகளை பயனாளிகளுக்கு விற்பனை செய்யும்பொழுது ஏற்படுத்திக்கொள்ளும் உடன்படிக்கை, பத்திர கட்டளைகளின் உள்ளிட்ட விபரங்களை கோரி, செயற்பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்கள் 16.06.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மனைப்பிரிவுகளில் பெரும்பாலான மனைபிரிவுகளின் பயனாளிகள் தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் உடன்படிக்கை ஒப்பந்தங்களின் வரையறுக்கப்பட்ட விதிகளை மீறியும், வாரியத்தின் அனுமதியின்றியும் கூடுதலாக கட்டமைப்பும், விதிமீறியும் அமைக்கப்பட்டுள்ளது என ஆய்வில் கண்டறியப்பட்டது. இவ்விதிமீறல் குடியிருப்பு மனைபிரிவுகள் அனைத்தும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஆவணங்கள் மற்றும் ஆலோசனைப்படியே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனினும், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை எண்.G.O.(Ms.) No.195, நாள்:05.11.2022-ன்படி ஏற்கனவே விதிமீறல் கட்டிடங்களின் மீதான தமிழ்நாடு நகரமைப்பு விதியின்படி ஆவணங்கள் கோரும் தாக்கீதுகள் மனுதாரர் திரு. மணிவாசகம் மற்றும் திருமதி. சரண்யா மற்றும் சசிகுமார் அவர்களுக்கு வழங்கப்பட்டு விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் வழங்கும் ஆவணங்கள், கருத்துருக்கள், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வழங்கும் கட்டிட வரைப்பட அனுமதி உள்ளிட்ட ஆவணங்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் தமிழ்நாடு நகரமைப்பு விதி 1971 மற்றும் அரசாணை எண். G.O. (Ms.) 195-ன்படி மேல் நடவடிக்கை

எடுக்கப்படும் என்ற தகவல் தங்களின் கனிவான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 20.09.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 12.9.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 20.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.**

"சென்னை, அடையார், இந்திரா நகர் 16வது குறுக்குத் தெருவில் குடிசை மாற்று வாரியத்திடமிருந்து தரைதளத்தில் மற்றும் மேல்தளத்தில் தலா ஒரு வீடு என்னால் வாங்கப்பட்டு, பின்னர் கீழ்தளத்தில் உள்ள வீட்டை என்னால் வாடகைக்கு விடப்பட்டும், பின்னர் எனக்கு சொந்தமான மேல்தளத்தில் உள்ள வீட்டை (Plot No.2/8) சசிகுமார் என்பவரிடம் விற்றுவிட்டேன்.

மேற்கண்ட திரு. சசிகுமார், என்னிடமிருந்து வாங்கப்பட்ட எனது வீட்டிற்கு மேல் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் மூன்று மாடிகள் கட்டியுள்ளார். மேலும் குடிநீர் இணைப்பு முறைகேடாக பெற்றுள்ளார். மேற்கண்ட குடியிருப்பு 50 வருடகால பழமையானதாகும். அக்கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் உள்ளது. மேலும் உயிர்பலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி-13 மண்டல அலுவலகத்தில் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட திரு. சசிகுமார் என்பவரால் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் மீது மாநகராட்சியால் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்"எனத் தெரிவித்துள்ளார்.

**4. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -13, உதவிப்பொறியாளர் 20.9.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

"மனுதாரரிடமிருந்து 11.3.2023 நாளிட்ட புகார் மனு மண்டலம்–13 அலுவலகத்தில் பெறப்பட்டு, 16.6.2023 அன்று "Stop Work Notice" தாக்கீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை, அடையாறு மண்டலம் 13, இந்திரா நகர் 6–வது குறுக்கு தெரு, கதவு எண்.2/8ல் அமைந்துள்ள இரண்டு குடியிருப்பு மனைகள் இரு பயனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நிபந்தனைகளுடன் விற்பனை செய்துள்ளது. மேற்கண்ட குடியிருப்புப்பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் 40 வருட கால பழமையானதாகும்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் கள ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை, அடையார், இந்திரா நகர் 16வது குறுக்குத் தெருவில் எண்.2/8ல் உள்ள கீழ்தளம் மற்றும் மேல்தளம் உள்ள குடியிருப்புகள் உட்பட பெரும்பாலான மனைப்பிரிவுகளில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட

மேம்பாட்டு வாரியத்தின் ஒப்பந்தங்களில் வரையறுக்கப்பட்ட விதிகளை மீறி கூடுதலாக கட்டமைக்கப்பட்டுள்ளது என கண்டறியப்பட்டது.

எனவே, மேற்கண்ட மனைப்பிரிவு குடியிருப்புகளை விற்பனை செய்யும்போது போடப்பட்ட நிபந்தனைகள் குறித்த விவரங்களைக் கோரி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தை 16.6.2023 அன்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. சசிகுமார் என்பவருக்கு சொந்தமான வீட்டின் மேல் அனுமதியின்றி மேலும் கட்டடங்கள் கட்டப்பட்டது தொடர்பாக அரசாணை எண். (MS) 195 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 5.11.2022ன்படி விதிமீறல் கட்டடங்களின் மீதான தமிழ்நாடு நகரமைப்பு விதியின்படி ஆவணங்கள் கோரும் தாக்கீது வழங்கப்பட்டு விவரங்கள் கோரப்பட்டுள்ளது எனவும், மேற்கண்ட கட்டடம் குறித்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடமிருந்து, மாநகராட்சியால் அனுப்பப்பட்ட 16.6.2023 நாளிட்ட கடிதத்திற்கு, பதில் அறிக்கை பெறப்பட்டவுடன் அக்கட்டடத்திற்கு Lock and Seal Notice வழங்கப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13 அவர்களின் 20.9.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளனர்.

**5. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி உதவிப்பொறியாளர் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் சென்னை, அடையார், இந்திரா நகர், 16வது குறுக்குத் தெருவில், குடிசை மாற்று வாரியத்திடமிருந்து கீழ்தளத்தில் ஒரு வீடும், மேல்தளத்தில் ஒரு வீடும் வாங்கியதாகவும், கீழ் தளத்தில் உள்ள வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டதாகவும், மேல் தளத்தில் உள்ள வீட்டை திரு. சசிகுமார் என்பவருக்கு விற்றுவிட்டதாகவும், திரு. சசிகுமார் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் மூன்று மாடிகள் கட்டியுள்ளதாகவும், அக்குடியிருப்பு 50 வருடங்கள் பழமையானது என்பதால், எந்த நேரமும் இடிந்து விழுந்து உயிர்பலி எற்படக்கூடும் என்பதாலும், அனுமதியன்றி கட்டிய கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து தன் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள விதி மீறல் கட்டிடத்திற்கு அரசாணை எண். (MS) 195 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்: 5.11.2022ன்படி மற்றும் தமிழ்நாடு நகரமைப்பு விதியின்படியும், 16.6.2023 நாளிட்ட "stop work notice" தாக்கீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனவும், மேலும், அக்கட்டடம் குறித்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் இக்குடியிருப்பின் மனைபிரிவுகளை பயனாளிகளுக்கு விற்பனை செய்தபோது எற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை, பத்திர கட்டளைகளின் உள்ளிட்ட விவரங்களை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது எனவும், அவ்வாவணங்கள், கருத்துருக்கள், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வழங்கும் கட்டிட வரைப்பட அனுமதி உள்ளிட்ட ஆவணங்கள் அடிப்படையில் தமிழ்நாடு நகரமைப்பு விதி 1971ன்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்—13ன் மண்டல அலுவலரின் அறிக்கையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் அடையாறு, இந்திரா நகர் 16வது குறுக்குத் தெருவில், குடிசை மாற்று வாரியத்திடமிருந்து வாங்கிய மேல்தள வீட்டை திரு. சசிகுமார் என்பவருக்கு விற்றுவிட்டார் என்பதும் திரு. சசிகுமார் பெருநகர் சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் மூன்று மாடிகள் கட்டிவிட்டதாக 11.3.2023 அன்று புகார் தெரிவித்துள்ளார் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல செயற்பொறியாளர், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு முகவரியிட்ட 16.6.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட குடியிருப்பு குறித்து ஆவணங்களை கோரியுள்ளார் என்பதும், ஆனால் அவ்வாறு கோரிய ஆவணங்கள் இந்நாள் வரை பெறப்படவில்லை என்பதும் அறியமுடிகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் வரம்பிற்குள் அனுமதியின்றி கட்டப்படும் கட்டங்களுக்கு Tamil Nadu Urban Local Bodies Act 2023 மற்றும் தமிழ்நாடு நகரமைப்பு 1971 விதியின் கீழ் நடவடிக்கை எடுக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தும், அதன்படி நடவடிக்கை எடுக்காமல், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஆவணங்கள் கோரியது எற்க இயலாது என்று இம்முறைமன்றம் சுட்டிகாட்ட விரும்புகிறது. பெருநகர சென்னை மாநகராட்சின் வரம்பிற்குள் விதிமீறி கட்டப்படும் கட்டடத்திற்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடமிருந்து பெறப்படும் ஆவணங்களால் எவ்வித பயனும் இல்லை. விதிமீறல் கட்டடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் திசைதிருப்பும் விதமாகவும், விதிமீறி கட்டப்பட்ட கட்டடத்தின் உரிமையாளருக்கு சாதகமாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் அலுவலர்கள் செயலாற்றியுள்ளார்கள் எனவும் இம்முறைமன்றம் கருதுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13 அலுவலகத்தால் 15.06.2023 அன்று "Notice for Production of Documents" தாக்கீது மட்டும் வழங்கியுள்ள நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் 16/6/2023 அன்று "Stop work Notice" வழங்கியதாக தெரிவித்து இருப்பது இம்முறைமன்றத்தை திசைதிருப்பும் விதமாக உள்ளதாகவே கருதிட இம்முறைமன்றம் தன்னுடைய கண்டனத்தை பதிவு செய்கிறது,

எனவே, 2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறிப்பாக:-

பிரிவு 7 The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு:   12</u>(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manager, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

– ன் அடிப்படையில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் அடையார், இந்திரா நகர் 16–வது குறுக்குத்தெருவில் உள்ள குடிசைமாற்று வாரிய குடியிருப்பு மேல்தளத்தில் உள்ள Plot No.2/8ற்கு மேலாக திரு. சசிகுமார் என்பவர் பெருநகர மாநகராட்சியின் அனுமதியின்றி மூன்று மாடிகள் கட்டியுள்ளார் என புகார் தெரிவித்தன் அடிப்படையில் கள ஆய்வு செய்து Tamil Nadu Urban Local Bodies Act 2023ன்படி நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருந்தும், நடவடிக்கை எடுக்காமல் தேவையில்லாமல், திசை திருப்பும் விதமாகவும், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஆவணங்கள் கோரிய கடமை தவறிய பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–13ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடமிருந்து வீடு வாங்கி இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியில்லாமல் கட்டடம் கட்டப்பட்டு இருந்ததால் அதனை கள ஆய்வாளர்கள் மூலம் கண்டறிந்து உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

It is a clear case of collusion, complicity and connivance on the part of the Zonal field officials concerned right from the Assistant Commissioner who is supposed to review such violations periodically. This Forum condemns the mindset and attitude of the field officials of the Greater Chennai Corporation concerned who have taken a safe route of addressing the Tamil Nadu Habitat Urban Development Board for clarification instead of adhering to the rules and regulations of the Town and Country Planning Act and delegated powers of the Greater Chennai Corporation and launching action then and there. This kind of conduct on the part of the Zonal Officials will only curry favour with violations of building rules and regulations which again would dent the image of the Local Body in the eyes of the general public. The Commissioner, Greater Chennai Corporation is directed to initiate necessary disciplinary action

against the delinquent officials involved in this issue and send a report to this Forum in the next 45 days.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S. மணிவாசகம்,
எண்.2/5A, 16வது குறுக்குத் தெரு,
இந்திரா நகர், அடையார், சென்னை – 600 020.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
மண்டலம்-13,பெருநகர சென்னை மாநகராட்சி,
115, டாக்டர் முத்துலட்சுமி சாலை,
அடையாறு, சென்னை – 600 020.
4. துணைஆணையர் (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 3.
} To ensure the representation of this order.
5. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்